# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No. 327/2024
# வழக்கு சாட்சி PW–1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேவராஜன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 10th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது சித்தப்பா மகன். எனது தோட்டத்திற்கு கீழ்புறம் எதிரியின் தோட்டம் உள்ளது. எனது வரப்பில் உள்ள தென்னை மரங்கள் எதிரியின் தோட்டத்திற்குள் சாய்வாக வளர்ந்து காணப்படும். அதேபோல் எதிரியின் தோப்பிலுள்ள தென்னை மரங்கள் எனது தோப்பிற்குள் சாய்வாக வளர்ந்து காணப்படும். இதனால் எதிரி எனது தென்னை மரத்தின் மட்டையை அடிக்கடி வெட்டி போடுவதால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது, அடிக்கடி வாய்த்தகராறும் நடந்து வந்தது. 22.10.2020ம் தேதி, மாலை 03.45 மணிக்கு நானும், எனது மனைவி கோமதியும் எங்கள் தோட்டத்திற்கு போனோம். நான் எனது தோட்டத்திலும் தென்னை போட்டியிருந்தேன். எனது தம்பி காந்திமதியின் தோட்டத்திலும் தென்னை போட்டு புடலைங்காய் செடி போட்டு பராமரித்து வந்தேன்.

அன்றைய தினம் நாங்கள் தோட்டத்திற்கு போனபோது தென்னை மட்டை எல்லாம் வெட்டி கிடந்தததை பார்த்தோம். அப்போது, எதிரி ராமசுப்பிரமணியன் அவரது தோட்டத்திலுள் அகத்தி குலையை வெட்டி கொண்டிருந்தார். அப்போது நான் எதிரியிடம் "மட்டையெல்லாம் வெட்டி கிடக்கு, நீ தானே வெட்டினாய்" என்று கேட்டேன். அப்போது எதிரி என்னை பார்த்து, "தேவடியா மவனே, அப்படி தான் வெட்டுவேன், அதை கேட்க நீ யாருல" என்று என்னை பார்த்து கேட்டார். அப்போது எனது மனைவி கோமதி எதிரியிடம் "எதற்காக எனது வீட்டுக்காரரை இப்படி கேட்கிறாய்" என்று சொல்லும் போது எதிரி என்னை பார்த்து "தேவடியா மவனே, அப்படி தான் வெட்டுவேன், அதை கேட்க நீ யாருல" என்று கேட்டார்.

எனது மனைவி எதிரியை சத்தம் போடும் போது எதிரி எனது மனைவியை பார்த்து, "புண்ட மவளே நீ செத்தால் தான் நிம்மதி, நீ இருக்கக்கூடாது, உன்னை கொன்னால் தான் எனக்கு நிம்மதி" என்று சொல்லி கொண்டிருக்கும்போது, எனது சித்தப்பா மகன் பிள்ளை ராஜாவும், எனது அண்ணன் மகன் கருப்பசாமியும் அப்போது ஓடி வந்தார்கள். அப்போது எதிரி "உன்னை கொன்னால் தான் எனக்கு நிம்மதி" என்று சொல்லி எனது மனைவியின் தலைமுடியை பிடித்து திருக்கி கொண்டு முன்னால் வளைத்து பிடித்து கொண்டார். எனது மனைவி அந்த பிடியிலிருந்து தப்பிக்க முயற்சி செய்தார், ஆனால் முடியவில்லை. அப்போது கருப்பசாமியும், ராஜாவும் சற்று பக்கத்தில் வந்து விட்டார்கள். அப்போது எதிரி கேரளாவில் உள்ள அரிவாளை வைத்து எனது மனைவியின் கழுத்தில் மாறி, மாறி இரண்டு வெட்டு வெட்டி விட்டார். எனது மனைவி மயங்கி கீழே விழுந்து விட்டார். இரத்தம் அதிகமாக

வெளியே வந்தது. அப்போது கருப்பசாமியும், ராஜாவும் எதிரியை சத்தம் போடவும் எதிரி என்னை பார்த்து "இன்னைக்கு தப்பித்து விட்டாய், என்னைக்கிருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு" என்று சொல்லிவிட்டு அரிவாளை கொண்டு ஓடி விட்டார். அதன் பின்னர் நானும், ராஜாவும் எனது மனைவியை தூக்கி இருசக்கரவாகனத்தில் ஏற்றி பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அவர்கள் அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நாங்கள் ஒரு வாடகைக்கு கார் பிடித்து சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கு போலீசார் வந்து எனது மனைவி மயங்கி நிலையில் இருந்ததினால், என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.12 11:05:06 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 327/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோமதி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | அழகுத்தேவர் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 10th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் சித்தப்பா மகன். அ.சா.1 தேவராஜன் எனது கணவர். எங்கள் தோட்டத்திற்கு கீழ்புறம் எதிரியின் தோட்டம் உள்ளது. எனது வரப்பில் உள்ள தென்னை மரங்கள் எதிரியின் தோட்டத்திற்குள் சாய்வாக வளர்ந்து காணப்படும். அதேபோல் எதிரியின் தோப்பிலுள்ள தென்னை மரங்கள் எனது தோப்பிற்குள் சாய்வாக வளர்ந்து காணப்படும். இதனால் எதிரி எனது தென்னை மரத்தின் மட்டையை அடிக்கடி வெட்டி போடுவதால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது, அடிக்கடி வாய்த்தகராறும் நடந்து வந்தது. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் சாயங்காலம் 03.30 மணியளவில் நானும், எனது கணவரும் எங்கள் தோட்டத்திற்கு போனோம். நான் எனது தோட்டத்திலும் தென்னை போட்டியிருந்தேன்.

எனது கணவரின் தம்பி காந்திமதியின் தோட்டத்திலும் தென்னை போட்டு புடலைங்காய் செடி போட்டு பராமரித்து வந்தோம். அன்றைய தினம் நாங்கள் தோட்டத்திற்கு போனபோது தென்னை மட்டை எல்லாம் வெட்டி கிடந்ததை பார்த்தோம். அப்போது, எதிரி ராமசுப்பிரமணியன் அவரது தோட்டத்திலுள் அகத்தி குலையை வெட்டி கொண்டிருந்தார். அப்போது எனது கணவர் எதிரியிடம் "மட்டையெல்லாம் வெட்டி கிடக்கு, நீ தானே வெட்டினாய்" என்று கேட்டார். அப்போது எதிரி எனது கணவரைப் பார்த்து, "தேவடியா மவனே, அப்படி தான் வெட்டுவேன், அதை கேட்க நீ யாருல" என்று தரக்குறைவான வார்த்தைகளால் பேசினார். அப்போது நான் எதிரியிடம் "எதற்காக எனது வீட்டுக்காரரை தரக்குறைவாக அகம்பாதமாக பேசுகிறாய்" என்று கேட்டேன்.

அப்போது எதிரி என்னை பார்த்து "வாயாடி மவளே, அப்படி தான் வெட்டுவேன், நீ சொல்லி விட்டு தானே உன் புருஷனை ஏவி விடுகிறாய், என்னைக்கிருந்தாலும் உன் சாவு என் கைக்குள்" என்று சொல்லி எனது தலைமுடியை இழுத்து பிடித்து கொண்டு அரிவாளால் எனது கழுத்து பக்கம் மாறி, மாறி வெட்டினார். நான் சத்தம் போடவும், ராஜாவும், கருப்பசாமியும் ஓடி வந்தார்கள். அப்போது எதிரி என்னைப் பார்த்து "என்னைக்கிருந்தாலும் என் சாவு என் கையில்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார், நான் கிறங்கி கீழே விழுந்து விட்டேன்.

அதன் பின்னர் எனது கணவரும், ராஜாவும் என்னை தூக்கி இருசக்கரவாகனத்தில் ஏற்றி பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள், அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு போக

சொன்னார்கள். எனது கணவர் ஒரு வாடகைக்கு கார் பிடித்து சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். நான் மயங்கிய நிலையில் இருந்ததினால், எனது கணவரை போலீசார் விசாரித்தார்கள். அதன் பின்னர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.12 11:05:15 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 327/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | மெக்கானிக் |
| கிராமம் | : | கீழப்பாவூர் | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 10th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது சித்தப்பா. அ.சா.1 தேவராஜன் எனது சித்தப்பா. அ.சா.1, அ.சா.2 க்கும், எதிரிக்கும் தென்னை மட்டை வெட்டுவது சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. 22.10.2020 ம் தேதி, 03.45 மணிக்கு நானும், எனது தம்பி ராஜாவும் தோட்டத்தில் நின்று கொண்டிருந்தோம். எதிரி மற்றும் அ.சா.1 ன் தோட்டம் எங்கள் தோட்டத்திற்கு பக்கத்தில் உள்ளது. அப்போது சத்தம் கேட்டது, நானும், ராஜாவும் ஓடினோம். நாங்கள் போகும் போது எனது சித்தி கழுத்தில் வெட்டுப்பட்டு கீழே கிடந்தார். எனது சித்தி எங்களிடம் "துரையப்பா (எதிரியின் பட்டப்பெயர்) என்னை வெட்டிவிட்டார்" என்று சொல்லி மயங்கி விட்டார்.

அதன் பின்னர் எனது தம்பி ராஜா, அ.சா.1 தேவராஜ் ஆகியோர்கள் சித்தியை தூக்கி இருசக்கரவாகனத்தில் ஏற்றி பாவூர்சத்திரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். நான்

இருசக்கரவாகனத்தில் தனியாக பின்னால் சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து விட்டு, மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். எனது சித்தப்பா(அ.சா.1) வாடகைக்கு கார் பிடித்து சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். நான் பெட்ஷிட், துண்டு எடுத்து கொண்டு தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பகுதி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் அன்றைய தினம் எதிரி அ.சா.1 தேவராஜனை பார்த்து அசிங்கமாக பேசியதாக சொன்னேன் என்றால் இல்லை. எதிரி அ.சா.2 கோமதியை அசிங்கமாக பேசி, தலைமுடியை பிடித்து இழுத்து கொண்டு பின்னந்தலையில் மாறி, மாறி அரிவாளால் எதிரி வெட்டியதை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.12 11:05:25 +0530